1991 சனவரி 22]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, நான் தொடக்கத்திலே விடை அளித்தபோது, இப்போது உதவி பெறுகிற கலைஞர்கள் 2,467 பேர் என்று குறிப்பிட்டேன். இதற்கு முன்பெல்லாம் ஒவ்வொரு ஆண்டும் 100 பேர் என்ற அளவிற்கு நலிந்த கலைஞர்களுக்கு உச்சவரம்பு வைத்து அவர்கள் இந்தப் பட்டியலில் இணைக்கப்பட்டார்கள். அதற்குப் பிறகு 200 பேராக அது ஆக்கப்பட்டது. அது 300 பேர் என்ற அளவிற்கு இப்போது ஆக்கப்பட்டு இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது. மேலும் தேவைப்படுமானால் அதைப் பற்றி இயல், இசை, நாடக மன்றம் பரிசீலித்து அரசுக்கு அறிவித்தால் அவற்றை ஏற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. பெ. சீனிவாசன் : துணைத் தலைவர் அவர்களே, திரைப்படக் கல்லூரியை அரசாங்கம் நடத்துவதைப் போல நாடகக் கலையை தற்கால முறைகளுக்கு ஏற்றவகையில் அபிவிருத்தி செய்வதற்கேற்ற முறையில் ஒரு நாடகக் கல்லூரியை தமிழ்நாடு அரசு தொடங்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இப்போது அத்தகைய உத்தேசம் எதுவும் இல்லை.

சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்துதல்

*1962—திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழகத்தில் உள்ள அனைத்து சைக்கிள் ரிக்ஷாக்களிலும் மோட்டார் பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அரசு அவர்களுக்கு உதவி செய்ய உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) : இம்மாநிலத்தில், அன்றாடப் பிழைப்பிற்காகத் தாங்களே சைக்கிள் ரிக்ஷா ஒட்டுபவர்களுக்கு அவர்கள் வைத்திருக்கின்ற சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்தவும், சொந்த சைக்கிள் ரிக்ஷா இல்லாமல் வாடகைக்கு சைக்கிள் ரிக்ஷா எடுத்து அன்றாடப் பிழைப்புக்காக ஓட்டுபவர்களுக்கு மோட்டார் பொருத்திய புது சைக்கிள் ரிக்ஷா வாங்கவும், அரசு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் ஒரு வண்டிக்கு ரூபாய் 1,500 மூலதன ஊக்குதவித் தொகையாகவும் மானியமாகவும் மீதியைக் கடனாகவும், கடனுக்குரிய வட்டியில் 7 விழுக்காடு

வட்டி ஊக்குதவித் தொகையாகவும், ஆதி திராவிடர்-பழங்குடியினர் வகுப்பினருக்குக் கூடுதலாக 2 விழுக்காடு வட்டி ஊக்குதவித் தொகையாகவும் வழங்குகிறது. தவணைத் தொகையைத் தவறாமல் உரிய தேதியில் கட்டுபவர்களுக்கு மேலும் 2 விழுக்காடு வட்டியைத் தள்ளுபடியாக தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்குகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மனிதனை மனிதன் இழுக்கின்ற ரிக்ஷாக்கள் ஒரு காலத்தில் இருந்தது. அந்த நிலைமை மாறி இன்றைக்கு சைக்கிள் ரிக்ஷாக்கள் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ் நிலையில் இன்றைக்கு அரசாங்கம் ஆதிதிராவிடபழங்குடியின மக்களுக்கு அதற்காக மானியம் வழங்கியிருக்கிறது. ஆனால் இந்தத் தொழிலில் அனைத்து இனத்தைச் சேர்ந்தவர்களும் ஈடு பட்டிருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையில் அரசாங்கம் சென்னை நகரில் இதுபோன்ற அனைத்து சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் கண்டிப்பாக மோட்டார் பொருத்த உதவி செய்யுமா? அதோடு மட்டுமல்ல, அரசாங்கமே இன்றைக்கு ஆட்டோ ரிக்ஷாக்களை மானியமாக வழங்கிக் கொண்டு வருவதால், சைக்கிள் ரிக்ஷாக் களுக்கும் அரசு மானியம் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

9-45 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, அரசு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் ரூ. 1,500 மூலதன மானியம் வழங்குகிறது என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். எனவே அதில் எந்த ஐயமும் இல்லை. வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மனிதனை மனிதன் இழுத்துக்கொண்டிருந்த கொடுமை ஒழிக்கப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்றைக்காவது பாராட்டியமைக்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்துவதை அதிகபடுத்த வேண்டுமென்று 837 ஆக இலக்கு இருந்தபோதிலும் கூட, 153 பேர்தான் மோட்டார் பொருத்துவதற்குத் தயாராக முன்வந்தார்கள். எனினும் மொத்தத்திலே பார்க்கும்போது, சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்துதல், மோட்டார் பொருத்திய புதிய சைக்கிள் ரிக்ஷாக்களைப் பெறுதல், அதேபோல ஆட்டோ ரிக்ஷாக்கள், வாடகைக் கார்கள், இந்த வகையில் நம்முடைய இலக்கு 5,032 ஆக இருந்தாலும் கூட, 5217 பேர் இதன் மூலம் பயன் பெற்றிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை 10.65 கோடி ரூபாயாகும். ஆதி திராவிட மக்களைப்பற்றி உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மற்ற எல்லாப் பிரிவினருக்கும் தரவேண்டுமென்றும் சொன்னார்கள். இந்த 5,217 பேரில் 1,072 பேர் ஆதிதிராவிட, பழங்குடியினர் என்கின்ற அந்த எண்ணிக்கை விபரத்தையும் நான் சொல்ல

1991 சனவரி 22]

விரும்புகிறேன். தொடர்ந்து பலரும் பயன் பெறுகின்ற வகையில் மிகுந்த எளிய அணுகுமுறையில், எந்தவித சங்கடமும் இல்லாமல் செய்யப்பட்டு, இந்த இலக்கை நாங்கள் எட்டியிருக்கிறோம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அறிவிப்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இன்றைய தினம் பெட்ரோல்-டீசல் தட்டுப்பாடு இருக்கின்ற நிலைமையில், சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்துவதன் மூலம் அதிகமான பெட்ரோல் பற்றாக்குறை ஏற்படலாம். இந்த நிலையில் டீசல், பெட்ரோல் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல் அவர்களுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அல்லது அவர்களுக்கு பெட்ரோல் மானியம் வழங்கி, அந்த ரிக்ஷா ஓட்டுகின்ற தொழிலாளர்களை வாழ வைக்கும் முறையிலாவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நடவடிக்கைகளை மத்திய அரசுதான் எடுக்க வேண்டும்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆட்டோ, கார் போன்ற வாகனங்களுக்கு உள்ளதைப் போல மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களுக்கும் அவற்றை ஓட்டுபவர்கள் சாலை விதிகளைப் பின்பற்றும் வண்ணம் ஓட்டுநர் லைசென்ஸ் பெற அறிவுறுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இது இத்தகைய சைக்கிள் ரிக்ஷாக்களைப் பெறுபவர்களுக்கு உதவியளிப்பதைப் பற்றிய கேள்வியாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அது குறித்து தனியாக ஒரு வினாவை எழுப்பினால் விடையளிக்க இயலும்.

மகாபலிபுரம் செல்ல ஹெலிகாப்டர் சர்வீஸ்

*8145—டாக்டர் து. திருமூர்த்தி :

திரு.எஸ்.டி. உகம்சந்த் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு சுற்றுலாக் கழகம் சென்னை விமான நிலையத்திலிருந்து மகாபலிபுரம் செல்ல ஹெலிகாப்டர் சர்வீஸ் இயக்க முன்வருமா ?